இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 244 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 01 – திங்கள்கிழமை 14 ஏப்ரல் 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 244: Thiruvalluvar Year - 2056 - Chithirai 01 - Monday 14 April 2025 - Chennai 16 Pages ₹ 5.00

## ரூ.322.60 கோடியில் 50,000 பயனாளிகளுக்கு நல உதவிகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்!

# இன்று அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள்!



## அனைத்து மாவட்டக் கழக அலுவலகங்களிலும் ‘சமத்துவ நாள்’ உறுதிமொழி ஏற்பு!

**சென்னை, ஏப். 14 -**

**அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135வது பிறந்த நாளை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று சென்னை சைதாப்பேட்டையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ரூ.44.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக 10 தளங்களுடன் 484 மாணவர்கள் தங்கும் வகையில் கட்டப்பட்டுள்ள எம்.சி.இராஜா கல்லூரி மாணவர் விடுதியை திறந்து வைக்கிறார்.**

**மேலும் 50.000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிப்பதுடன்; அம்பேத்கர் பிறந்த நாளை சமத்துவ நாளாக கொண்டாடும் வகையில் ‘சமத்துவ நாள்’ உறுதிமொழியை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கிறார்.**

**இதேபோன்று அனைத்து மாவட்டக் கழக அலுவலகங்களிலும் ‘சமத்துவ நாள்’ உறுதிமொழி ஏற்க தலைமைக் கழகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இன்று (14.4.2025) அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளான சமத்துவ நாளில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை, எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் 44 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் பத்து தளங்களுடன் 484 மாணவர்கள் தங்கும் வசதியுடன் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின கல்லூரி மாணவர்களுக்கான புதிய விடுதிக் கட்டடத்தை திறந்து வைக்க உள்ளார்.



அதனைத் தொடர்ந்து, சென்னை, ராஜா அண்ணாமலைபுரத்தில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபத்தில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசின் சார்பில், முதலமைச்சர் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். பின்னர், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, முதலமைச்சர் அவர்கள் தலைமையில் “சமத்துவ நாள்” உறுதிமொழி ஏற்கப்பட உள்ளது.

தொடர்ந்து, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைபெறவுள்ள சமத்துவ நாள் விழாவில், முதலமைச்சர் அவர்கள், 227 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவ, மாணவியர்களுக்கான 18 விடுதிக் கட்டடங்கள், 46 பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு, 19 சமுதாய நலக்கூடங்கள், 22 கல்லூரி விடுதிகளில் கற்றல் கற்பித்தல் கூடம் மற்றும் 1000 பழங்குடியினர் குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைக்கவுள்ளார்.

### நலத்திட்ட உதவிகள்!

மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த 48,436 பயனாளிகளுக்கு 104 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கவுள்ளார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைபெறவுள்ள சமத்துவ நாள் விழாவில் மொத்தம் 49,542 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 332 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கியும், கட்டடங்களை திறந்து வைத்தும், முதலமைச்சர் அவர்கள் சிறப்பிக்க உள்ளார்.

சமத்துவ நாள் விழாவில், முதலமைச்சர் அவர்கள் தமிழாக்கம் செய்யப்பட்ட அண்ணல் அம்பேத்கர் அவர்களின் இரண்டு நூல்களையும், வன உரிமைச் சட்டத்திற்கான வரைபடத்தையும் வெளியிட உள்ளார்.

இவ்விழாவில், பிரகாஷ் அம்பேத்கர் அவர்கள் சிறப்புரை யாற்றவுள்ளார், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளான சமத்துவ நாளையொட்டி அனைத்து மாவட்டங்களிலும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில் இதேபோன்று சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

### தலைமைக் கழக அறிவிப்பு!

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135வது பிறந்த தினத்தை முன்னிட்டு தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு :-

“வடக்கில் உதித்த சமத்துவ சூரியன் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்ரல் 14ஆம் தேதி இனி சமத்துவ நாள் என்று கொண்டாடப்படும்” என தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவையில் விதி 110ன் கீழ் அறிவித்து, அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் அன்றும் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து, “சமத்துவ நாள் உறுதிமொழி” ஏற்றுக் கொண்டு வரப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டக் கழக அலுவலகங்களிலும் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உள்ளிட்ட கழகத்தினர் மலர் தூவி மரியாதை செலுத்தி;

கீழே குறிப்பிடப்பட்டுள்ள “சமத்துவ நாள்” உறுதிமொழியை ஏற்று, அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளை “சமத்துவ நாளாக” கொண்டாடிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### “சமத்துவ நாள்” உறுதிமொழி

**சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும்,**

**சாதிகளின் பெயரால் நடக்கும் சமூக அடக்குமுறைகளுக்கு எதிராகவும், தொடர்ந்து போராடி,**

**ஒதுக்கப்பட்டவர்களுடைய உரிமைகளுக்காகவும்,**

**ஒடுக்கப்பட்டவர்களுடைய சமத்துவத்திற்காகவும்,**

**வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்து,**

**எளிய மக்களின் உரிமைகளைப் பற்றி விழிப்புணர்வை ஊட்டிய,**

**நம் அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளில்,**

**சாதி வேறுபாடுகள் ஏதுமில்லாத சமத்துவ சமுதாயத்தை அமைக்க,**

**நாம் அனைவரும் பாடுபடுவோம் என்றும்,**

**சகமனிதர்களைச் சாதியின் பெயரால் ஒரு போதும் அடையாளம் காணமாட்டேன் என்றும்,**

**சக மனிதர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைபிடிப்பேன் என்றும் உளமார உறுதி ஏற்கிறேன்.**

இவ்வாறு தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

## குடியரசுத் தலைவர் - ஆளுநர்களுக்கு காலக்கெடு - வழிமுறைகள்!

# உச்சநீதிமன்றத் தீர்ப்பின் சாரம்!

**புதுடெல்லி, ஏப்.14 -**

**மாநில ஆளுநர்கள் முதலாவது முறையாக அனுப்பி வைக்கும் மசோதாக்கள் மீது மூன்று மாதங்களுக்குள் குடியரசுத் தலைவர் முடிவெடுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அண்மையில் அளித்த தீர்ப்பில் தெரிவித்துள்ளது.**

தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி மசோதாக்கள் மீது முடிவெடுக்காமல் தாமதப்படுத்துவதாகக் கூறி, தமிழ்நாடு அரசு 2023-இல் தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் ஏப்ரல் 8 அன்று தீர்ப்பளித்தது.

அதில், ஆளுநர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள், காலக்கெடு மற்றும் வழிமுறைகளை நீதிமன்றம் நிர்ணயித்தது.

### நீதிபதிகளின் தீர்ப்பு!

நீதிபதிகள் ஜே.பி. பார்திவாலா, ஆர். மகா தேவன் அடங்கிய அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை அளித்த இத்தீர்ப்பின் 415 பக்கங்கள் அடங்கிய விரிவான தீர்ப்பின் நகல், உச்சநீதிமன்ற இணையதளத்தில் வெள்ளிக்கிழமை பதிவேற்றப்பட்டது.

அதன் முக்கிய சாரம்சங்கள் வருமாறு :-

- இந்த விவகாரத்தில் ஒன்றிய உள் துறை அமைச்சகம் பரிந்துரைக்கும் கால அட்டவணையை ஏற்றுக்கொள்வது பொருத்தமானது. குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்காக மசோதாக்களை அனுப்பி வைக்கும் ஆளுநரின் பரிந்துரை பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அவை குறித்து குடியரசுத் தலைவர் ஒரு முடிவை எடுக்க வேண்டும். ஏதேனும் தாமதம் ஏற்பட்டால், அதற்குரிய காரணங்களைப் பதிவு செய்து சம்பந்தப்பட்ட மாநிலத்துக்கு தெரிவிக்க வேண்டும். மாநிலங்களும் ஒத்துழைப்பை வழங்கி, எழுப்பப்படும் கேள்விகளுக்கு உரிய பதில்களை வழங்க வேண்டும், ஒன்றிய அரசு அளிக்கும் பரிந்துரைகளை விரைவாகப் பரிசீலிக்க வேண்டும்.
- ஆளுநர் முதலாவது நடவடிக்கையிலேயே ஒரு மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பும்போது, குடியரசுத் தலைவர் அதற்கான ஒப்புதலை நிறுத்தி வைத்தால், இந்த நீதிமன்றத்தின் முன் அத்தகைய நடவடிக்கையை எதிர்க்க மாநில அரசுக்கு உரிமை உண்டு.
- அரசமைப்புச் சட்டத்தின் 200-ஆவது பிரிவானது, தனக்கு அனுப்பப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்கவோ, ஒப்புதலை நிறுத்தி வைக்கவோ அல்லது குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கவோ ஆளுநருக்கு அதிகாரம் அளிக்கிறது.
- அரசமைப்பின் 200-ஆவது பிரிவின்படி, ஆளுநரின் செயல்பாடுகளுக்கு குறிப்பிடப்பட்ட எவ்வித காலக்கெடுவும் கிடையாது. எனினும், காலக்கெடு பரிந்துரைக்கப்படாவிட்டாலும் தனது ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்க ஆளுநரை 200-ஆவது பிரிவு அனுமதிப்பதாக கருதலாகாது. மாநில அமைச்சரவையின் உதவி மற்றும் ஆலோசனைகளுக்கு ஆளுநர் கட்டுப்பட வேண்டும்.
- தனக்கு முதல் முறையாக வந்த மசோதாவை அரசுக்கே திருப்பி அனுப்பி வைத்த பிறகு அந்த மசோதா மீண்டும் அவரது மறுபரிசீலனைக்கு வந்தால் அதை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் பரிந்துரைக்க முடியாது.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

### சமூகநீதி நாயகர்

## பி.பி.மண்டல், கனவை நிறைவேற்றுவதில் உறுதி!


### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு !

**சென்னை, ஏப்.14-**

**சமூக நீதியை உயர்த்திப் பிடித்த நாயகர் பி.பி. மண்டல் அவர்களின் நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவில், ‘பி.பி. மண்டல் அவர்களின் கனவை முழுமையாக நிறைவேற்றும் போராட்டத்தில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்’ என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

சமூகநீதி நாயகர் பி.பி.மண்டல் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அமைப்புரீதியாக வாய்ப்பு மறுக்கப்படுவதை தனது ஆணையத்தின் மூலம் அம்பலப்படுத்தி,



சமூகநீதியை உயர்த்திப்பிடித்த நாயகர் பி.பி.மண்டல் அவர்களின் நினைவுநாளில் அவருக்கு எம் புகழ் வணக்கம்!

மண்டல் அவர்கள் கொண்ட பார்வையை இந்த தேசம் உணரும் முன்பே நன்குணர்ந்து அவரது நோக்கத்துக்குத் துணையாக உறுதியாக நின்றது திராவிட இயக்கம். அவர் முன்னெடுத்த போராட்டம் இன்னும் நிறைவுறவில்லை. துணிவும் நியாயமும் மிக்க அவரது பல பரிந்துரைகள் இன்னும் நிறைவேற்றப்படாமலே இருக்கின்றன. சமூகநீதிக்கான பயணத்தில் பல தடைகளும் புதிய வடிவங்களில் தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன.

மண்டல் அவர்களைப் போற்றுவதென்பது அவரது கனவை முழுமையாக நிறைவேற்றுவதே அன்றி, அதனை நீர்த்துப்போகச் செய்வது அல்ல. அவர் கனவை நிறைவேற்றும் போராட்டத்தில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.